


இடி.ஏ.வின் திருவிளையாடல் புராணத்துக்குள் நுழைவதற்கு முன்னால், பரமாத்மாக்கள் தம் விளையாடல்களை நிகழ்த்தத் தேர்ந்தெடுக்கும் களங்களைப் பற்றி அறிமுகம் செய்துகொண்டு விடவேண்டியது அவசியம்.

என்ன பெரிய களம்? தனிநாடு என்பது கோரிக்கை. அரசாங்கத்தின் உறுப்புகளைத் தாக்குவதுதானே என்பீர்களானால், அதுதான் இல்லை. இந்த விவகாரம் கொஞ்சம் வேறு மாதிரியானது. இ.டி.ஏ.வின் சுதந்திரப் போராட்ட செயல்திட்டத்தின் பிரகாரம் கொலைகளுக்கு இடமில்லை. ஆனால், அதற்குப் பிரச்னை தரக்கூடிய இதர இம்சைகள் விஷயத்தில் கொலைகள் அனுமதிக்கப்படுகின்றன!

பேஜார்? விளக்கிவிடலாம்.

தொடங்கப்பட்ட காலத்தில் இ.டி.ஏ. ஒரு சாது இயக்கம். ஜனநாயக ரீதியில்தான் போராடலாம் என்று பெரியவர்கள் முடிவு செய்து வெள்ளைக்கொடியுடன் ஆரம்பித்தார்கள். ஆனால், நவீன உலகில் அதெல்லாம் சாத்தியமில்லை என்று கனவில் யாராவது தேவதை வந்து சொல்லியிருக்கலாம். அல்லது புரட்சி முகம் எடுத்த பிறகு அறப்போரெல்லாம் ஆபத்து என்று அவர்களுக்கே தோன்றியிருக்கலாம். மார்க்சிய - லெனினிய சித்தாந்தத் தாக்கமே இ.டி.ஏ.வுக்குப் பாதியில் வந்து சேர்ந்ததுதான்.

எனவே, ஆரம்பக்கால செயல்திட்டத்தை அப்படியே வைத்துக்கொண்டு, சில பின்னிணைப்புகளை மட்டும் புதிதாகக் கொடுத்துவிட்டார்கள். சுதந்திரப் போராட்டம் சாது ரகம்தான். ஆனால், இடையில் சில களைகளை நீக்க வேண்டி நேர்ந்தால், அது சைடு பிசினஸ். ஜனநாயகம் விரோதமில்லை. ஆனால், அதிரடிகளுடன் பங்காளி உறவு உண்டு. எம்.பி.க்களைக் கொல்ல மாட்டோம். என்றால், யாரையுமே கொல்லமாட்டோம் என்று அர்த்தமில்லை. பிரதமரையே வேண்டுமானாலும் போட்டுத் தள்ளுவதில் பிரச்னை கிடையாது. யுத்தம் புரிவது மக்களுக்காக. ஆனால் மக்களிலேயே கொஞ்சம் புல்லுருவிகள் இருப் பார்களேயானால், உருவியெடுக்கத் தடையேதுமில்லை.

ரொம்ப உள்ளே போகவேண்டாம். இது போதும். இ.டி.ஏ. எம்மாதிரியான ஆசாமிகளைக் குறிவைக்கிறது என்று பாருங்கள். விவரம் புரிந்துவிடும்.

ஸ்பெயினின் ராணுவம் மற்றும் காவல்துறை அவர்களுக்கு முதல் டார்கெட். குறிப்பாக, அதிலுள்ள தீவிரவாதத் தடுப்புப் பிரிவினர். தங்கள் செயல்பாடுகளுக்கு முதல் தடை அவர்கள்தான் என்பதால், மாதம் ஒருமுறை நாள் குறித்து, குறைந்தது பத்துப் பேரையாவது கொல்வது என்பதை 1992-லிருந்து ஒரு கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இசபெல் 2 என்கிற மகாராணி முன்னொரு காலத்தில் (1844 என்கிற வருஷம் அத்தனை

முக்கியமா என்ன?) தொடங்கி வைத்த 'கார்டியா சிவில்' (Guardia Civil) என்கிற காவல் அமைப்பு ஸ்பெயினில் மிகவும் புகழ் பெற்றது. போலீஸ்காரர்கள்தான். ஆனால் சிறப்பு போலீஸ். தனக்கென தனியே கப்பல், விமானப் படைப்பிரிவுகள் எல்லாம் வைத்திருக்கும் ஒரு பெரிய அமைப்பு.

இந்தப் பிரிவின் முக்கியப் பணி எல்லைக்காவல். துணைப்பணி, தீவிரவாதத் தடுப்பு. இந்த இரண்டுமே இடி.ஏ.வுக்கு அலர்ஜி தரக்கூடிய செயல்கள். அவர்கள் செயல்படுவது எல்லைகளில். குறிப்பாக பிரான்சின் எல்லையோர ஸ்பெயின் கிராமங்கள் முழுவதும் இடி.ஏ.வின் கட்டுப்பாட்டில் இருக்கிற பிரதேசங்கள். இடி.ஏ.வின் தலைவர்கள் அனைவரும் எப்போதும் பிரான்சில்தான் இருப்பது வழக்கம். கோடை அல்லது குளிர்கால விடுமுறைகளில் மட்டும் ஜாலி சுற்றுலாவாக ஸ்பெயினுக்குள் வந்து போவார்கள். அவர்கள் அங்கே இருப்பதுதான் வசதி. பெரும்பாலும் புரட்சிகளை பக்கத்து தேசத்து எல்லையில் உட்கார்ந்துகொண்டு செய்தால்தான் சரிப்படும் போலிருக்கிறது.

இந்தக் காரணங்களால் கார்டியா சிவில் படைப்பிரிவினரை இடி.ஏ. தன் முதல் டார்கெட்டாக வைத்துக்கொண்டிருக்கிறது. அவர்களது ஆயுதச் சாலைகள், பதுங்கு தளங்கள், குவார்ட்டர்ஸ், ஆபீஸ், மெஸ் என்று எந்த ஒன்றையும் விட்டு வைப்பதில்லை. எப்போது போரடித்தாலும் நாலு துப்பாக்கிச் சனியன்களைத் தூக்கிக்கொண்டு, ஒரு காவல் முகாமுக்குப் போய் இரண்டு ரவுண்டு சுட்டுவிட்டு வருவது இடி.ஏ.வினரின் வழக்கம். இதற்குக் கணக்கு வழக்குகள் எல்லாம் கிடையாது. செயல்திட்டங்கள் கிடையாது. எந்த ஒரு இடி.ஏ. உறுப்பினரும் நினைத்த மாத்திரத்தில் போய் தாக்குதல் நிகழ்த்திவிட்டு வரலாம். ஒன்றிரண்டு தலைகள் தேறுமானால் கைதட்டுவார்கள். பெரிய அறுவடை என்றால் ஒயின் விருந்து. ஒன்றும் பெயரவில்லை என்றால், தட்டிக்கொடுத்து அடுத்த முயற்சிக்கு ஆயத்தம் பண்ணிவிடுவார்கள்.

இந்தக் காவல் துறைத் தாக்குதல் மிகச் சமீப காலத்தில் பரிணாம வளர்ச்சியடைந்து, கார்டியா போலீஸின் குடும்பத்தினரையும் தாக்கத் தொடங்கியிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்வதென்றால், 2000-ம் ஆண்டுக்குப் பிறகு. இன்னும் குறிப்பாகச் சொல்வதென்றால், காவல் படையில் புதிதாக இணையும் போலீஸாரின் குடும்பத்தினர் மீது அபாயமில்லாத தாக்குதல்களை நிகழ்த்தி, அதன் மூலம் எச்சரிக்கை விடுத்து, 'ஓடிப்போய் விடு' என்று சொல்வது இடி.ஏ.வின் வழக்கம். மீறி பணியில் தொடர்பவர்களின் குடும்பங்கள் குறி வைக்கப்படுகின்றன. ஏதாவது ஒரு இரவைத் தேர்ந்தெடுத்து, போய் வீட்டைக் கொளுத்திவிட்டு வந்துவிடுவார்கள்.

இந்தத் தனிநபர், குடும்பத் தாக்குதல்கள் ஸ்பெயினில் மிகப்பெரிய பிரச்னை. சுதந்திரப் போராட்டம் என்கிற லட்சியத்திலிருந்து இடி.ஏ. இதனால் விலகிப் போகிறது என்று இடி.ஏ. ஆதரவாளர்களிடமிருந்தே விமர்சனங்கள் வரத்தொடங்கின. ஆனால், யாரும் கண்டுகொள்ளவில்லை.

அடுத்தபடியாக அவர்கள் குறிவைப்பது, தண்டல் கட்டாத பிசினஸ் புள்ளிகளை. இது குறித்து முன்பே கொஞ்சம் பார்த்தோம். புரட்சி வரி (Revolutionary Tax) என்று இடி.ஏ. இதற்குப் பெயர் வைத்திருக்கிறது. அதாகப்பட்டது, அவர்கள் புரட்சி செய்வதற்கு மக்கள் கட்டியாக வேண்டிய வரி என்று அர்த்தம். கட்ட மறுக்கும் பெரும்புள்ளிகளை பிராக்கெட் செய்து கொலை செய்வதன் மூலம் தேசிய அளவில் மிகப்பெரிய அதிர்ச்சி அலைகளை உருவாக்குவது திட்டத்தின் முதல் கட்டம்.

இதனைக் கொண்டு மற்றவர்கள் அவசியம் வரி கட்டியாக வேண்டும் என்று மறைமுகமாக நிர்ப்பந்தம் செய்யப்படுகிறார்கள்.

ஜோஸ் மரி கோர்ட்டா என்று ஒரு பெரிய இரும்புத் தொழிலதிபர் ஸ்பெயினில் இருந்தார்.

நியாயமாக 'இருக்க' வேண்டியவர். அவரை 'இருந்தா'ராக்கிவிடுவது என்று இ.டி.ஏ. முடிவு செய்தது. இது நடந்தது நான்கு வருடங்களுக்கு முன்பு.

வருஷத்துக்கு நூறிலிருந்து நூற்றைம்பது கோடி ரூபாய் வரை லாபம் பார்த்துக் கொண்டிருந்த ஒரு நல்ல நிறுவனத்தை அவர் நடத்திக்கொண்டிருந்தார். ஒழுங்காக புரட்சி வரியும் செலுத்திக் கொண்டுதான் இருந்தார்.

திடீரென்று ஒரு சமயம், இ.டி.ஏ. தன் வரித்தொகையை அந்த வருடம் அதிகரித்துவிட்டது. குறிப்பாக, பெரும் தொழிலதிபர்களுக்கு. என்ன செய்வது? தலையெழுத்தே என்று தண்டம் கட்டியவர்கள் தப்பித்தார்கள். கட்ட மறுத்த ஜோஸ் போன்ற சிலருக்கு முதலில் நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

'ஐயா பெரிய மனுஷர் அவர்கள் சமூகத்துக்கு. இப்பவும் நாளது தேதிவரை தங்களிடமிருந்து வந்து சேரவேண்டிய வரிப்பணம் வந்தபாடில்லை. புரட்சியாளர்கள் துப்பாக்கிகளுக்கு எண்ணெய் போட வழியில்லாமல் காத்திருக்கிறார்கள். இக்கடிதம் கண்ட ஒரு வார காலத்துக்குள் தங்கள் நன்கொடையைக் காசோலையாகவோ, பிரான்சில் மாற்றத்தக்க வரைவோலையாகவோ அனுப்பி உதவ அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். அனுப்பாமலிருந்தீர்களானால், வம்புடன் ஏதாவது செய்யவேண்டி வரும். - இப்படிக்கு, தங்கள் அன்புள்ள இ.டி.ஏ.வின் வெளியுறவுத்துறை அதிகாரி யாரோ எக்ஸ்.ஒய்.இஸட்.'

ஜோஸ் அந்தக் கடிதத்தைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஒரு பாதுகாப்புக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டுத் தன் வேலையைப் பார்க்கப் போய்விட்டார். சொல்லப்போனால் மறந்தே விட்டார்.

ஆனால் இ.டி.ஏ. மறக்கவில்லை. ஆறு மாதம் ஊறப்போட்டார்கள். ஜோஸ் ஒரு விடுமுறையைக் கழிக்கக் குடும்பத்துடன் ஸ்விட்சர்லாந்து புறப்பட்டபோது, அதே விமானத்தில் இ.டி.ஏ.வின் கொலையாளி ஒருவனும் பயணம் செய்தான். ஸ்விட்சர்லாந்தில் அவர் தங்கிய ஹோட்டலிலேயே அவனும் அறை எடுத்துத் தங்கினான். நிழல் மாதிரி அவரைப் பின் தொடர்ந்து கொண்டே இருந்தான். தத்தி ஜோஸுக்கு இது தெரியவில்லை. என்னமோ ஓர் ஏரியில் படகை எடுத்துக் கொண்டு உய்யலாலா பாடிக்கொண்டே சவாரி போவதற்காக முந்தைய தினமே அவர் பணம் கட்டியபோது, அவர் சவாரி போக இருந்த படகில் முதல் நாளே ஒரு குண்டைப் பொருத்திவிட்டு அடுத்த ஃப்ளைட் பிடித்து ஸ்பெயினுக்கு வந்துவிட்டான்.

பாவப்பட்ட ஜோஸ், அந்த ஏரியிலேயே ஜல சமாதி அடைந்தார். அவரது மனைவியை குற்றுயிரும் கொலை உயிருமாகத் தூக்கி வந்து மருத்துவமனையில் போட்டார்கள். பிரயோஜனமில்லாமல் போய்விட்டது.

ஸ்பெயினில் மிகப்பெரிய அதிர்ச்சி அலைகளை உண்டாக்கிய இந்தப் படுகொலைச் சம்பவம் நடந்து ஒருவாரம் கழித்து, இ.டி.ஏ.விடமிருந்து அனைத்து தொழிலதிபர்களுக்கும் ஒரு கடிதம் வந்தது. 'நீங்கள் ஜோஸ் ஆக விரும்பமாட்டீர்கள் என்று நம்புகிறோம்.' ஒரே வரி! அவ்வளவுதான்.

அடுத்த குறி, பத்திரிகையாளர்கள். அதாவது இ.டி.ஏ.வின் செயல்பாடுகளை விமர்சிக்கும் பத்திரிகையாளர்கள். 'இது விஷயத்தில் அவர்களது கருத்து ஒன்றுதான். பத்திரிகையாளர்களின் வேலை, இ.டி.ஏ.வின் செயல்பாடுகளைக் கவனிப்பது அல்ல! கவனித்தாலும் விமர்சிப்பது அல்ல. அவர்கள் அரசாங்கத்தை விமர்சிக்கட்டும், அவர்களது அட்டூழியங்களை எழுதட்டும், மக்களுக்குத் தெரிவிக்கட்டும். எங்கள் பக்கம் வரக்கூடாது!'

மே 2000-ல் இ.டி.ஏ. தன் முதல் பத்திரிகையாளப் படுகொலையை நிகழ்த்தியது. ஜோ லூயி லோபஸ் டி'லாகாலி என்கிற ஸ்பானிஷ் பத்திரிகையாளர் ஒருவரை கண்ட துண்டமாக வெட்டி

எறிந்து கணக்கை ஆரம்பித்து வைத்தது. அதன்பின் கணக்கு வழக்கில்லாத தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. பாஸ்க் பிரச்னை குறித்து எழுதவே ஸ்பானிஷ் பத்திரிகையாளர்கள் அச்சப்படும் அளவுக்கு பயங்கரங்கள் அரங்கேறின. பல பத்திரிகை அலுவலகங்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன. பத்திரிகை அதிபர்களின் கார்கள் பெட்ரோல் ஊற்றி எரிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களது குடும்பங்களுக்குக் கொலை மிரட்டல்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

இந்த நடவடிக்கைகள் சமீப ஆண்டுகளில் அதிகரித்துக்கொண்டே போனதை அடுத்து பிரான்ஸைத் தலைமையகமாகக் கொண்டு செயல்படும் Reporters without Borders என்னும் அரசு சாரா தன்னார்வ அமைப்பின் உறுப்பினராக ஸ்பெயின் தன்னை இணைத்துக் கொண்டது.

இது ஓர் உலகளாவிய அமைப்பு. பத்திரிகைச் சுதந்திரத்தைக் காப்பாற்றும் அமைப்பு. இந்த அமைப்பின் சார்பில் வெளிவரும் ஒவ்வொரு ஆண்டறிக்கையிலும் ஸ்பெயினில் இ.டி.ஏ. நிகழ்த்தும் பத்திரிகையுலகத் தாக்குதல்கள் இடம் பெறாமல் இருப்பதே இல்லை. நூற்றுக்கணக்கில் கண்டனக் கூட்டங்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள், எத்தனையோ வழக்குகள் போட்டிருக்கிறார்கள், ஊர்வலங்கள், எதிர்ப்பு அடையாள உண்ணாவிரதங்கள் இன்னபிற. ஓர் உபயோகம்? மூச்.

2005 செப்டம்பரில் இந்தத் தன்னார்வ அமைப்பைக் கண்டித்து இ.டி.ஏ. ஒரு துண்டுப் பிரசுரம் வினியோகித்தது. 'என்ன பெரிய பத்திரிகைச் சுதந்திரம், புடலங்காய்? ஒழுங்கா வேலையைப் பாத்துக்கிட்டுப் போறியா, இல்ல மவன ஒனக்கு வெக்கட்டுமா வேட்டு?'

இ.டி.ஏ.வின் அடுத்த இலக்கு, ஸ்பெயினின் பொருளாதாரத்தைக் குலைப்பது. பெரும்பாலும் சுற்றுலாத் தலங்கள், ரயில் பாதைகள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள் ஆகியவற்றைக் குறி வைத்து இவர்கள் நிகழ்த்தும் தாக்குதல்கள் மிகவும் கோரமானவை. மூட்டை மூட்டையாக வெடி மருந்துகளை ஏற்றி வந்து வெடிக்கச் செய்துவிட்டுப் போய்விடுவார்கள்.

ஒருவாரம், பத்து நாள் வரைக்கும் சம்பந்தப்பட்ட இடத்தில் புகைந்துகொண்டே இருக்கும். போகும் உயிர்கள், எரிந்த பணம், எதிர்காலம் எது குறித்தும் கவலை கிடையாது. அது ஓர் அடையாள எச்சரிக்கை. 'நாங்கள் இருக்கிறோம். எங்கள் கோரிக்கை இருக்கிறது. இன்னும் உயிருடன் இருக்கிறது. எங்களைக் கவனி. தினமும் எங்களைக் கவனி. கவனிக்காமல் நீ இருக்கும்போது, உன்னை கவனிக்கச் செய்ய எங்களுக்கு இம்மாதிரியான வழிகள்தான் தெரியும்.'

வெகுகாலம் வரை ஸ்பெயினில் மட்டும்தான் இக்காரியங்களைச் செய்துகொண்டிருந்தார்கள். இரண்டாயிரமாவது ஆண்டுக்குப் பிறகு, இ.டி.ஏ. மெல்ல மெல்ல பிரான்ஸிலும் தனது திருவிளையாடல்களைத் தொடங்கிவிட்டது. இதற்குமேல் பொறுக்க முடியாது என்று இரண்டு தேசங்களும் கூட்டணி வைத்து வேலையைத் தொடங்கியது இதற்குப் பிறகுதான்!